புதினப்பத்திரிகையாக பதிவுசெய்யப்பட்டது.

இந்துசாதனம்.

வருஷம் (1889) முதல் வெளியாகி வருகின்றது.

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்:	ஆ 1-க்கு	ரூ 5-00
இலங்கை, இந்தியா:	"	ரூ. 8 00
தொலைவாய்ப்பகுதி:	"	ரூ 9.00
சனிப்பிரதி:		சதம் 5

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—ஒருவரி		ரூ 9-00
" அரைக்கலம்		ரூ 4-50
" காற்கலம்		ரூ 3-00

அடுத்த முறைகட்கு படி விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினுன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—சா. } யாழ்ப்பாணம்:—விபவஞு ஆவணி மீ அ௨ (1928 ஆகஸ்ட் 23) வியாழக்கிழமை. { இலக்கம்—தசு.

உ

கணபதிதுணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
செம்பூத்த கிகமாக மக்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ளீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த கிளைஞர்தத் நிவிநு நூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றேது
மதம்பூத்தவிதாயகன்றுள்வணங்கிவாழுவாம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லரமா ரரமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குன்மப்பு, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகர, பீதானு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சாரப்பருப்பு, பாதமபருப்பு, சாத்தாவரி, நீர்முள்ளிவிதை, காகப்பூ வகைகப்ஸம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சமிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் சிரிவிது, சீர்க்கடுப்பு, சீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாகியிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பிளிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைருத்தலுக்கு ரூபா க0. கால் ருத்தலுக்கு ரூபா டு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாசிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினுல் முன்மனி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவதானஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்து,
மட்டக்களப்பு,
இலங்கை.

(M. 36.)

சக்தி வீரிய விருத்தி லேகியம்.

(1) தற்காலத்தில் அளவுகடந்தமான வீரியவிருத்தி அவுடதங்கள் வெளிவந்திருப்பினும் அவற்றுள் என்கள் சக்தி வீரியவிருத்தி லேகியமே விசேஷகுணத்தைக் கொடுக்கும்.

(2) இந்த லேகியத்தின் குணமானது உஷ்ணம் முதலிய மேகரோகங்கள் ஜீவரத்னபிடமாகிய தேகத்தைத் தாக்குவதால் உண்டாகும் எலும்புருக்கி ரோகங்களையும் துரிதஸ்கலிதமென்னும் ஓர்வித நோயினுல் கேரிட்ட இடுப்புவலியும் மலேரியாக் காய்ச்சலினுல் (Malarial fever) சரீரம் மெலிந்து சாப்பாட்டில் பிரியமில்லாமல் தேகவெறுப்பு, பாண்டு, சோகை, காமாலை, வீக்கம், மலச்சிக்கு, பித்தக்கிறுதி, பித்தவாய்வு, இருதயத்துடிப்பு, காமப்புத்தளர்ச்சி, லாகால் அசதி, விரைவாதம், ஆண்தன்மை காளுக்குகான் குறைதல் முதலிய துர்க்குறிகளையும் நீக்கி மனோல்சாகம், ஞாபகசக்தி, வீரியவிருத்தி, தேகபலம், சரீரநாரோக்கியம், முதலியன உண்டாக்குவதில் மேன்மைவாய்ந்து, ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல பெலவீனத்திற்கும் இதற்கு நிகர் மருந்து கிடையாது.

(3) என்கள் சக்தி வீரிய விருத்தி லேகியத்தை 40 நான் முறைப்படி உட்கொண்டால் தேகத்தில் ஏற்பட்ட உஷ்ணத்தை சமனபடுத்தி இரத்தத்தைச் சகல காம்புகளிலும் ஓடச்செய்து சப்ததாதுகளுக்கும் வலுவை ஏற்படுத்தி அதிக வயதினுலும் பலஈனத்தினுலும் காம்பு சுருங்குவதால் ஏற்பட்ட சகலவித சோர்வையும் புறக்கணித்து மனாரம்மியமான இன்பரசவாழ்வைத் தரத்தக்கதோர் சித்தானந்த "மகா சஞ்சீவினி" என்றல்லவோ சொல்லலாம்! இச்சாபத்தியம்!!

1	ருத்தல் மருந்து	ரூபா	10	00	வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.
½	" "	"	5	00	
¼	" "	"	3	50	

தற்திவிலாசம்— "Chambavee" Karainagar.

இங்ஙனம்,
பிஷக்வரர, டக்டர் எம் எஸ். பிள்ளை ஏ. எம். ஏ. சீ
சிவ சாம்பவி ஔடதாலயம்,
காரைநகர், யாழ்ப்பாணம்.

குறிப்பு—என்கள் லேகியத்தில் இவ்விதமான மிருகாதியுள்ளும் லாகிரிவஸ்துக்களும் சேர்க்கப்படவில்லை. இவை தாவரவஸ்துக்களைக்கொண்டே தயார்செய்யப்பட்டது பேரும் என்களிடம் அனேகவிதமான நோய்களுக்கு மருந்துகள் தயார்செய்யப்பட்டிருக்கின்றன மருந்து வேண்டியவர்கள் வியாதியின் குணங்கள், வயது, உத்தியோகம், புகையிலை கல்லது ஸ்திரீ என்பதையும், கலியாணமானவரா இல்லையா; வியாதி தூண்டிற்தாலை, முன் வேறு எவ்வித வியாதிகள் ஏற்பட்டதென்றும் விபரமாக எழுதினுல் வகையால் தீர்க்க முடியுமானுல் அரசருக்குகர் மருந்துகளை V. P. P. மூலமாய் அனுப்புவோம்; அல்லது நோதநோமா யிருந்தபக்ஷத்தில் பதில் எழுதிவிடுவோம்.

பதில் வேண்டுவார்கள் 2 Anas. 6 Pies முத்திரையும் இலங்கைப்பூர்வமாய்வாடுமுதலியதொடுவாய் ராசியப் பகுதிகளிலிருந்து 20 cts முத்திரையும் அனுப்பினுல் யிபரமாய் பதில்எழுப்பப்படும்

(Q 104)

இலங்கை ஆயுள்வேத வைத்தியகல்லூரி யாழ்ப்பாணம்.

மேற்படி கல்லூரியிற் சேர்ந்து ஆயுள்வேத வைத்தியத்தையும் ஒருங்கே கற்க விரும்புவோரும் ஆயுள்வேத சித்த வைத்தியத்தைமட்டும் (கொறஸ்பொண்டன்கோஸ்) விதிதகற்பனை மூலமாகக் கற்று டிப்பிளோமா என்னும் அரங்கேற்றுப் பத்திரம் பெற விரும்புவோரும் தங்களது மனுப்பத்திரங்களை மேற்படி கல்லூரித் தலைவருக்கு அனுப்பி அக்கற்பனைக்குரிய விதயங்களைத் தெரிந்துகொள்க. அனுபவசித்தியுள்ள நாசரிமார்களுக்கும் சுதேச வைத்தியர்க்கும் கற்பனையின் கால அளவு அவர்க்குரிய அனுபவசித்திக்குத் தக்கதாய்க் குறைக்கப்படும்.

இலங்கா ஆயுள்வேத வைத்திய கல்லூரித் தலைவர்.

(Q. 106.)

சுதேசவை.

காரைநகர் வியாபிற் சைவபரிபாலன வித்தியாசாலைக்கு மூன்று பயிற்றப்பட்ட உபாத்தியாயர்கள் தேவை. விரும்புவோர் அறிபருக்கு எழுதுக.

(Mis 1282.)

மூன்று அருமைவாய்ந்த நூல்கள்.

(1) மதுபிறப்புத் தூஷண பரிகாரம்.

இது கிறிஸ்தவர்களுக்கும் சைவர்களுக்கு மிடையில் மதுபிறப்பு விஷயமாக நடந்ததருக்க முடிவு இதுவோர் அறிவுபயக்கும் நூல். —192 பக்கங்களையுடையது, விலைசதம் 50.

(2) மதுபிறப்புத் தூஷண பரிகாரக் கலிகோலபஞ்சனம்.

இது கிறிஸ்துமதம் மதுபிறப்புக் கொள்கையுடையதோ அன்றோ? என்பதுபோன்ற பல அரிய விஷயங்களாக யாக்கோபுவுக்கும் ஞானசேகரனுக்குமிடையில் நிகழ்ந்ததேயானதருக்க முடிவு.
—57 பக்கங்களையுடையது. விலைசதம் 25.

(3) கொலைமறுத்தல் பிரசிஞேத்தரம்.
—விலைசதம் 5.

மேற்படி நூல்கள் விலைப்படும் பிரதான முகங்கள்.

(1) சி. க. இராஜையன், மணல் தறை ஒழுங்கை, நிருசெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

(2) ச. ந. சண்முகாதன் புத்தகசாலை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(3) சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில், யாழ்ப்பாணம்.

(Q. 111.)

யாழ்ப்பாண ஐக்கியவியாபாரசங்கம் லிமிட்டெட்.

1918-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

பிறதேசங்களிலிருந்து
நெல்லு
அரிசி
மற்றுஞ் சாப்பாட்டுக்குரிய சகல சாமான்களும், பலவகையான சாய்ப்புச் சாமானகளும் வருவித்து விற்பவர்கள்.

இது யாழ்ப்பாணத்தவர்களால் நடத்தப்படும் பிரபலமான வர்த்தகம்.

சாமான்கள் நிறமானவை.
விலை சகாயம்.
சுதேச முயற்சியைத் தைரியப்படுத்துங்கள்.
தங்கள் ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.
பெரிய கடையின் வடமேல் வீதிகளில் இக்கம்பெனிக் கடைகள் கடைபெறுகின்றன.

(Q. 108.)

கௌரவ ஸேர் பொன் இராமநாதனவர்கள் இயற்றிய நூல்கள்.

1. செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் (எழுத்திகாரமும் சொல்லதிகாரமும்) தன்னூற் சூத்திரங்களைத் தழுவி இலகுவான உரை நடையில் இயற்றப்பெற்றது. 545 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த பதிப்பு ரூபா 3-00. சாதாரண பதிப்பு ரூபா 2 அணு 8.
2. பகவத்கீதா — தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் 517 பக்கங்கள் கொண்டது ரூபா 2-00.
3. திருக்குறள் பாயிரமும் இராமநாதீயம் என்ற விருத்தியுரையும் 143 பக்கங்கள் கொண்டது ரூபா 1-00.

மானேஜர்,
இராமநாதன் கல்லூரிப் புத்தகசாலை,
சுன்னாகம், யாழ்ப்பாணம்.

(H 61)

சுகம் சுறுந்காயும் நிச்சயமாயுங் கிடைக்கும்.
எவ்வித நோவாயிருந்தாலுஞ்சரி,
தலைவலி
சாம்புவலி
கீல்வாய்வு
தடைப்பிடிப்பு
வாதம்
களுக்கு
தொண்டை கோ
நெஞ்சுச்சளி
எல்லாவற்றிற்கும்
லிட்டில்ஸ் ஓரியென்டல் பாம்.
உடன் சுகந்தரும்.

43 வருடகாலமாய் அனுபோகத்தில் சிறந்த மருந்து என்று நிச்சயிக்கப்பட்டது. அது தரும் சுகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அதின் விலை ஒரு பொருடல்ல.

மிகுந்தொழுப்புச் சோதித
எல்லா ஷாப்புகளிலுங் கிடைக்கும்.
(2—28. Little's Oriental Balm and Pharmaceuticals Ltd. Madras.

(X. 51.)

சைவ அநாதப் பிள்ளைகள் சாலையும் மாணவர் இல்லமும்.

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

அநாதப்பிள்ளைகள் எல்லோரும், தமிழ் நாற்றாம் அல்லது அதற்குமேற்பட்ட வகுப்புக்களிற் கிற்றியடைந்த ஏனைய மாணவர்களும் இச்சாலையிற் சேரலாம்.

இப்பிள்ளைகள் திருநெல்வேலி முத்தத்தமிழித்தியாசாலையிற் கல்வி கற்பிக்கப்படுவர்.

பிரதான நோக்கம்.

1. தாராதரம் பெற்ற உபாத்தியாயர்கள்.
2. கோப்பாய் அரசினர் ஆசிரியகலாசாலைப் பிரவேசப்பரீட்சைக்குத் தகுதி உடையவராக்கல்.
3. பிரவேசபண்டித, பாலபண்டித, பண்டிதபரீட்சைகளுக்குத் தகுதியுடையவராக்கல்.
4. சமதொழில் செய்தொழில் முதலிய கைத்தொழில்களிற்றேர்ச்சியுடையவராக்கல்.

அநாதப்பிள்ளைகளுக்கு வேதனமின்றி உணவளிக்கப்படும். ஏனையோர் விடுதிச்செலவில் ஓர் பகுதியாவது கொடுத்தல்வேண்டும்.

ந. ஏபாபதிப்பிள்ளை. திருநெல்வேலி,
சு. இராசரத்தினம், சைவவித்தியாதிருத்திச்சங்கம்.

(M. 69)

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவஞு ஆவணிமீ அ௨ வியாழக்கிழமை.

வித்தியாபரிபாலன அறிக்கைப் பத்திரம்-1927-ம் ஆண்டு.

1

இலங்கை அரசினர் வித்தியாபகுதித் தலைவராகிய மிஸ்டர் L மைக்ரேபெயபவர் 1927-ம் ஆண்டில் இலங்கையில் வித்தியாவிஷயமாகச் செய்த விருத்தியினையும் பிறவற்றையுங் குறித்து வழக்கம்போல் அறிக்கைப்பத்திரம் வெளியிட்டிருக்கின்றார். இதன்கண்ணுள்ள பிரதான விஷயங்கள் இங்கே எமது குறிப்புரையோடு எடுத்துக்காட்டுகின்றோம்.

1927-ம் ஆண்டிலே இலங்கையிலுள்ள வித்தியாசாலைகளின் தொகை 4495 ஆகும். இவற்றுள் 1258 அரசினரால் வைத்து நடத்தப்படுவன. 2222 வித்தியாசாலைகள் அரசினரின் உதவிப்பணம் பெறுவன. 1005 வித்தியாசாலைகள் அரசினர் உதவி பெறாதன. குறித்த வருடத்தில் முந்திய வருடத்தைக்காட்டிலும் 43 அரசினர் பாடசாலைகளும், 70 உதவிப்பணம் பெறும் பாடசாலைகளும் இவ்வருடத்தில் அதிகமாக வுள்ளன. கல்விபயிலும் பிள்ளைகள் அரசினர்வித்தியாசாலைகளில் 195649 பேரும், உதவிப்பணம் பெறும் வித்தியாசாலைகளில் 293562 பேரும் இருக்கின்றார்கள். முந்திய வருடத்தைக் காட்டிலும் இந்த வருடத்தில் கல்விபயிலுஞ் சிறுவர்களின் தொகை 15969 அதிகமாக விருக்கின்றது; சிறுமியரின் தொகை 6547 மேலதிகமாகும். உபாத்தியாயர்களின் தொகை அரசினர் வித்தியாசாலைகளில் 4173 ஆகும்; ஏனைய வித்தியாசாலையிற் கல்வி பயிறும் ஆசிரியர்களின் தொகை 10125. முந்திய வருடங்களைக்காட்டிலும் 763 உபாத்தியாயர்கள் இவ்வருடத்தில் மேலதிகமாக விருக்கின்றனர்.

இலங்கை முழுவதிலும் அரசினருக்குரிய ஆங்கில வித்தியாசாலைகள் 17 ஆகும். இவ்வித்தியாசாலைகளிற் கல்வி பயிறும் சிறுவர்களின் தொகை 2540; சிறுமியரின தொகை 44 ஆகும். உதவிப்பணம் பெறும் ஆங்கில வித்தியாசாலைகளின் தொகை 238. இவற்றிற் கல்வி பயிலுஞ் சிறுவரின் தொகை 37193; சிறுமியரின் தொகை 11504 ஆகும்.

1927-ம் ஆண்டு தொடக்கமாக கேம்பிறிஜ் சர்வகலாசங்கத்தாரால் நடத்தப்படும் ஸீனியர் ஜூனியர் பரீட்சைகளிற் பிரவேசிக்கும் மாணக்கரின் வயதைக் கட்டுப்படுத்தியிருக்கின்றார்கள். ஜூனியர்ப் பரீட்சையிற் பிரவேசிக்கும் மாணக்கருடைய வயசு பத்தொன்பதிற்கு மேற்படக் கூடாதென்றும் ஸீனியர் பரீட்சையிற் பிரவேசிப்போரின் வயசு இருபத்தொன்றுக்கு மேற்படக் கூடாதென்றும் ஜூனியர்ப் பரீட்சையிற் சித்தியடைந்த ஒரு மாணக்கன் பின்னர் 2. வருடகாலம் படித்தே ஸீனியர்ப் பரீட்சையிற் பிரவேசிக்க வேண்டுமென்றும் இலங்கை வித்தியாபகுதியார் கட்டுப்பாடு செய்திருக்கின்றனர்.

இந்த வயசுக் கட்டுப்பாடு இலங்கையிலுள்ள மாணக்கர்களிலியலாதிலே ஆவசியகம் வேண்டியதொன்றாகும்; 19 வயசு சென்றும் ஜூனியர்ப் பரீட்சையிலும், 21 வயசு சென்றும் ஸீனியர்ப் பரீட்சையிலும் சித்தி யெய்த முடியாத சிறுவர்கள் பொருட்டே பெருந்தொகை செலவிடுதலும், உபாத்தியாயர்கள் அப்பியாசனை வித்தியாசாலைகளில் வைத்துப் படிப்பிப்பதும் விடுத்த மெய்பது சதுவசிதமாகும். மற்றும் மதியினும் கல்வியில் மனஞ்செல்லப் பெறாதவர்களுமாகிய இப்பிள்ளைகள் தங்கள் படியாது லிவேதோடமையாது தஞ்சகபாடிகளாயுள்ள ஏனைச் சிறுவர்களின் கல்வித் தேர்ச்சிக்கும் இடையூறாக விருக்கின்றார்கள். ஊக்கத்தோடு கலவியிலாத பிள்ளைகள் தங்களுக்குந் தங்கள் பெற்றோருக்குந் தங்கள் கல்வியிலும் வித்தியாசாலைக்கும், அந்த வித்தியாசாலைக்கு கல்வி பயிறும் உபாத்தியாயருக்கும் ஊரவர்களுக்கும் ஈறில் தங்கள் சாதிக்கும் வசையைத் தேடிவிடுகின்றார்கள். இப்படியான கல்வியில் ஆர்வமில்லாத பிள்ளைகளுக்கு வருடக்கணக்கில் வயத்துக் கல்வியூட்டினிக்கு பணத்தையும் காலத்தையும் சிரமத்தையும் செலவிடுதலைத் தவிர்த்து இவர்கள் தங்கள் பிற்காலத்திலே சீவனஞ் செய்தற்கான ஒருமார்க்கத்தை இவர்களுக்குப் பயிற்றுவிடுதலே நன்றாம்.

உலகம் பலவிதம்.

கல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் கொடியேறித் திருவிழா கடைபெறுகின்றது. இன்று ரதகாரர் திருநிழாவாகும். வருஷம் முழுவதிலும் யாழ்ப்பாணத்துள்ளவர்க்கு இந்தமகோற்சவகாலமே சிறந்த காலமாகும். யாழ்ப்பாணம் எங்கேபார்த்தாலும் இப்பொழுது குகமயமாகவே காணப்படுகின்றது. கந்தசுவாமிகோயில மகோற்சவம் தொடங்குகாள் சமீபிக்கவே இங்குள்ள ஆடவர் மகளிர்களெல்லாரும் தங்கள் தங்கள் இல்லங்களைச் சுத்திசெய்து உற்சவகால விரதத்தை யநுட்டித்தற்காகிய ஆயத்தங்களைச் செய்கின்றனர். மாமிச போசனிகளாயுள்ளார் அந்தவனவை மொழித்துவிடுகின்றனர். மதுபானிகள் அந்தப் பானத்தைத் தவிர்க்கின்றனர். விரதம் அநுஷ்டிப்போர் தொகை அதிகமாகவும் அநுஷ்டியாதார் தொகை சொற்பமாகவுமிருக்கும். உற்சவ விரதம் அநுஷ்டிக்காதவர்களும் ஆசாரசீலராக இரத 26 நாட்களும் ஒழுங்கொள்ளுகிறார்கள். உத்தியோகத்நிமித்தமும் வியாபாரம் முதலிய வேறு கருமங்களின் நிமித்தமும் பிறவூர்களில் வாசஞ்செய்யும் கமதயாழ்ப்பாணத்தவர்கள்தாமும் ஆங்காங் கிருந்துகொண்டு கல்லூராரனைக் குறித்து இவ்விரதத்தை அநுட்டிக்கிறார்கள் ரத நீர்த்தோற்சவ காலங்களில் அவர்கள் திருவாறு விநிதலை பெற்று இங்கே வந்து ஆறுமுக சுவாமியை கேரிற் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெறுகின்றார்கள். கல்லூர் யேன் திருன் கோயில் வீதியில் விடியற்புறம் 3 மணி தொடக்கம் அதிக்கிறவு 9 மணிவரைக்கும் இடைவிடாதி அங்கப் பிரதக்ஷணமாகிய வழிபாட்டைச் செய்யும் ஆடவர்களின் பத்திவைராக்கியமும், அடியழித்துக் கும்பிடுதல் என்று வழங்கும் பஞ்சாங்க நமஸ்காரத்தைச் செய்யும் பெண்களின் பத்திவைராக்கியமும் பார்ப்போரெவர்க்கும் பெரும் அச்சத்தையும் அற்புதத்தையும் தருந் தன்மையன. இச்செயல்களைப் பார்த்துமனமுருகாதவரைக் காண்டல் அரிது

* * *

இனி கல்லூர்ப்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலின் மகத்துவத்தையுஞ் சிறப்பையுஞ் சொல்லுமிடத்துக் கோயிலும் கோபிரதாரங்களும் பிராகாரங்களிலுள்ள திருமடங்களும் திருக்குளமும் அதனைச் சுற்றுப் புறமுஞ் சூழ்ந்துள்ள மண்டபங்களும், திருவீதிகளிலுள்ள கடைகளும் எவையும் கதிர்வேற் பெருமானின் திருவருள் விலாசத்துடனேயே காணப்படும். திருக்கோயிலிலும் திருவீதிகளிலும் கோயிலுக்குச் செல்லும் மார்க்கங்களிலும் காணப்படும் அன்பர்களும் வியாபாரியர்கள்தாமும் திருவருள் விலாசத்துடனேயே காணப்படுவர் சுருங்கச் சொல்லுமிடத் இச்சமையத்தில் இங்கே காணப்படும் எவனும் எவளும் எதுவும் எவரும் திருவருள்விலாசத்துடன் காணப்படுவர். இனி முருகன் ரதத்திலில் கல்லூராரனே, கதிர்வேலா, அரோகரா என்ற திருநாமங்களை உச்சரித்துக்கொண்டும், அருணகிரிநாதர் அரிய வாக்குக்களாகிய கந்தரலங்காரம் கந்தரநுபூதி திருப்புகழ் முதலாம் தோத்திரங்களோடும் அன்பர்கள் கண்களில் நீர் தாரைதாரையாகப் பெருகக் குமரனை இரந்துநிற்றல் கண்டோர் உளத்தை கெருப்பிடைப்பட்ட மெழுகென கெக்கு கெக்குருகச் செய்யும். கல்லூர் யேன சக்திமிற சிறியார் பெரியார், ஏழைகள் செல்வர், கற்றார் கல்லாதார், ஏஜமான வேலைக்காரர், உயர்ந்தவர் தாழந்தவர் என்ற பேதமில்லையாம். ஆலயமோ பகற்காலத்தில் எத்துணைச் சனக்கூட்டமிருந்தாலும் அவற்றையெல்லாம் தன்னகத்நிற்கொண்டதாயப்பரிசுத்தமாகக்காணப்படும்; இராக்காலத்திற் சோதிமயமாகவே காணப்படும் கோயிலின்கண்ணே உக்கதமான கோபுரத்து விளங்கும் இரு பரிய கண்டாமணிகளின் நாதம் பல மைல்கள் தூரத்திலிருக்கும் அன்பர்களின் செவிவாயிலாக உட்சென்று அப்பெருமானாது திருவருட் பிரபாகத்தை இடையறாது பெய்து மனத்திற் பத்தியென்னும் பயிரை வளர்க்கும்.

* * *

இனி, கல்லூர்க் கந்தசுவாமி கோயில் மகோற்சவகாலம் உற்சவ தரிசனத்திற்கும் கடவுள் வழிபாட்டிற்கும் மாத்திரந்தான் ஆகியகாலமென்று காம்எண்ணிக் கொள்ளக்கூடாது. இதுகுள்ள பெண்கள் தாங்கள் விரும்பிய ஆடை யாபரணங்களை நாயகனைக்கொண்டு வாங்குவித்தற்கும் ஈடுவைத்த நகைகளை மீளுவித்தற்கும் புதுப்பித்தற்கும் தாம் விரும்பிய பொருள்களைக் கோயில் வீதியிலுள்ள கடைகளில் தாமே சென்று வாங்குவதற்கும் உற்சவ தரிசனத்தையும் விரதத்தையும் காரணமாகக் காட்டிச் சிறிது சுவாதீனம் பெறுதற்கும் இதுவே வாய்த்த காலமாகும். வியாபாரிமாராகவுள்ளவர்கள் ஏதோ லாபத்தை யடைதற்கு இதுவே காலமாகும். "வாத்தியகாரர், காவடி வாடகைக்கு வைத்துக் கொடுப்போர் பூத் தொடுப்போர் பாங்களென்று சொல்லப்படும் பண்டாரங்கள் என்னுமிவர்களும் லாபமடையுங் காலமும் இதுவே. உத்தியோகர்த்தமாகவும் வேறு கருமார்த்தமாகவும் தங்களைப் பிரிந்து பிறவூர்களில் வசிக்கும் நாயகன் வரவை மனையாளும் தந்தை தாயர் வரவைப் பிள்ளைகளும் பிள்ளைகள் வரவை அன்னை தந்தையரும் சகோதரர்வரவைச் சகோதரிகளும் சுற்றமித்திரர் வரவை இங்குள்ள சுற்றமித்திரரும் மகிழ்ச்சியோடு எதிர்பார்த்திருக்குங் காலமும் இந்த மகோற்சவகாலமேயாகும். இக்காலத்தில் இங்குள்ளார் எல்லாரும் மனமகிழ்ச்சியடைய மச்சமாமிசம் விற்போரும் சோரமாக மதுபானம் விற்போரும் மாத்திரம் தங்கள் பிழைப்புக் குறைந்துவிட்டதேயென்று துயரமுறுவர்.

* * *

ஆனால் இந்த மகோற்சவம் முடிந்த பின்னர் இவர்கள் கடந்துகொள்ளும் விதத்தையிட்டே நாம் யோசிக்கவேண்டியது. மற்சமாமிசம் புசியாத மதுபானமில்லாத அன்பர்கள் எக்காலத்தும் ஒரே தன்மையாக ஆசாரசீலராய்க் காணப்படுகின்றனர். மற்சமாமிச போசனிகளும் மதுபானிகளும் இந்த 26 நாளும் தாங்கள் அநுஷ்டித்த விரதங்களையும் வழிபாடுகளையும் ஒழுக்கத்தையும் மறந்து, கழுவிக் கழுவிச் சேற்றில் மிதிப்பார் போற் பிள்ளையும் இவ்வாசாரங்களைக் கைக்கொள்ளத் தலைப்படுகின்றனர். மகோற்சவ விரதகாலமு முடிந்து இவர்கள் முழுகும் எண்ணெய் முழுகுங் மிகப் பயன்காரமானது. புமக்கோடிகளிற் கவிழ்த்து வைக்கப்பட்ட புலாற் சட்டிகளெல்லாம் பழையபடி சமயலறையிற் புகுகின்றன. மதுபானம் இவர்களைப் பாவசமாக்கி விடுகின்றது இவர்கள் அநாதியும் அறத்தையும் விடுத்து மருளையும் மறத்தையும் அடுத்து நிற்கின்றனர். மகோற்சவ காலத்தில் இவர்கள் அநுஷ்டித்த விரதமும் ஒழுக்கமும் சிலநாட் செல்ல இவர்களை விட்டுப் பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் பேய்விடுகின்றன. 'சிற்றைப் புனைந்தென்ன பீராடப் போவென்ன நீ மனமே. மாற்றிப் பிறக்க வகையறிந்தாயில்லை' யென்றும் 'சினமடங்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும், மனமடங்கக் கல்லார்க்கு வாய் ஏன் பாராபரமே' யென்றும் பெரியோர் சொன்ன பிரகாரம் தாங்கள் பழகிக் கொண்ட அநாசாரங்களையு நியமங்களையும் கைவிட்டு உய்ய முடியாதவர்களுக்கு விரதமென்ன அநுட்டானமென்ன என்று சமது முருகேசு பிள்ளை 'ஐயோ, இவர்களெல்லாரும் மகோற்சவகாலத்தில் ஒழுகிவந்த பிரகாரம் வருஷம் 365 காலும் ஒழுகிவந்தாலோ' என்று முருகேசுவே வாடுகின்றார்.

காலநிலை.

சென்ற செவ்வாய்க்கிழமை காலையும் இல்கேசிறு மழை பெய்தது. பெய்த மழை பேதியதல்ல. ஆனாலும் சுமக்காரர் விதைத்தற்கான முயற்சிகளைச் செய்துவருகின்றார்கள். இப்பொழுதும் மழைக்கோலங் காணப்படுகின்றது.

வலிகாமம் வடக்கு ஐக்கிய சங்கம்.

ஷை சங்கத்தின் வருடாந்தக் கொண்டாட்டம் 1923-ம் ஆ௨ ஆவணிமீ 25௨ சனிக்கிழமை சாயங்தரம் 5 மணிக்குத் தெல்லிப்பழை மிஷன் தமிழ்ப்பாடசாலை மண்டபத்தில் கடைபெறுமெனவும் ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தர் அவர்கள் தலைமையின்கீழ் அநேக பிரசாரணங்களும் சங்க உத்தியோகஸ்தர் தெரிவும் கடைபெறுமெனவும் அறியலானோம்.

சட்டநிருபணசபை.

சட்டநிருபண சபையினரும், சட்ட நிருவாக சபையினரும் அங்கத்தவர்களின் இவ்வருடப் பிரயாணச்செலவுக்காக ரூபா 1,05,000 அநுமதிக்கப்பட்டிருக்கிறது. அதில் இப்பொழுது ரூபா 3500 மாத்திரம் எஞ்சியிருத்தலால் அத்தொகை போதியதன்றெனவும், இன்னும் ரூபா 22,750 வேண்டுமெனவும், அதை அநுமதிக்கும்படியும் சட்டநிருபணசபையிற் கேட்கப்பட்டிருக்கிறது.

தேசாதிபதி மட்டக்களப்பைத் தரிசித்தல்.

மட்டக்களப்பைச் சார்ந்த கல்லடியிலுள்ள பாலத்திற் பிரயாண ஆரம்பஞ் செய்வதற்காக வருகிற அக்டோபர்மீ 9௨ கமது தேசாதிபதியவர்கள் மட்டக்களப்பைத் தரிசிப்பாரெனத் தெரிகிறது. அப்பொழுதே தேசாதிபதியவர்கள் மட்டக்களப்பை முதன்முதலாகத் தரிசிப்பர். செப்டெம்பர்மீ 11௨ தேசாதிபதியவர்கள் வடமத்திய மாகாணஞ் சென்று அங்கேகொண்டுகொள்தங்கி அதன்பின்னர்த் திரிகோணமலைக்குப் பிரயாணமாவர்.

புகைரதப்பகுதி.

மழை அமோகமாகப் பெய்ததினால் புகைரதப்பாதைகள் வெள்ளத்தால் அள்ளுண்டு பழுதடைந்துவிட்டன எனவும் அவைகளில் விசேஷமாக கெடும் பாதையையும் புத்தளப்பாதையையும் சீர்ப்படுத்துவதற்கு இப்பொழுது ரூபா 30000 அவசியம் வேண்டுமெனவும் புகைரதப் பகுதி மேலதிகாரி அறிக்கை செய்துள்ளார். இன்னும் இக்க வருடாந்தத்திற்குள் முழுவதையுஞ் சீர்ப்படுத்த முடியாதெனவும், அடுத்த வருடத்திற்கு வேண்டிய தொகையின் கணக்கைச் சீக்கிரம் அனுப்புவதாகவுங் கூறியிருக்கின்றார். இக்க ரூபா 30000-க்கும் ஒரு விசேஷ அனுமதி யளிக்கப்பட்டிருக்கின்றது.

புகைரத விபத்து.

சென்ற சனிக்கிழமை சாயங்தரம் ஹனுப்பிட்டிப் புகைரதஸ்தானத்திற்குச் சமீபத்தில் வட்டாலை என்னுமிடத்திலுள்ள வயோதிபரான மிஸ்டர் G. பெறிரு என்பவர், பாதைமீது கடந்து சென்றபொழுது புகைரதத்தால் தட்டி வீழ்த்தப்பட்டார். அவரைத் தூக்கிப் பார்த்தபொழுது அறிவில்லாதிருக்கக் காணப்பட்டார். தலையில் கடுங்காயம் ஏற்பட்டிருந்தது. கொழும்புக்குச் சென்றுகொண்டிருந்த புகைரதவண்டியை நிறுத்தச் செய்து அதில் அவரை ஏற்றிக் கொழும்புப் பெரிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். அவர் அடைந்திருந்த காயங் காரணமாக ஞாயிற்றுக்கிழமை வைத்தியசாலையில் இறந்து போயினர்.

சர்வகலாசாலைச் சங்கம்.

சென்ற ஏப்ரில் மாதத்தில் சட்டநிருபண சபையார் சர்வகலாசாலைச் சங்கத்தை நியமிப்பதினால் வரும் செலவுக்கோர் கொடுக்க உடன்பட்டிருந்தார்கள். ஷை சங்கத்தின் இவ்வருடச் செலவுக்காக ரூபா 19000 வேண்டியிருக்கின்றது. இத்தொகையைக் கொடுக்க அநுமதிக்கும்படி வென்கிரிஷலை (24-8-28) கூடும் சட்டநிருபணசபையாரைக் கேட்கப்பட்டிருக்கின்றது. ஷை சங்க அங்கோசனருக்கு அவர் செய்த வேலைகளுக்காக 750 பவுன் கொடை கொடுக்க வேண்டியிருக்கிறது. அதில் ஒரு பகுதியாகிய 250 பவுனுக்குச் சமமான ரூபா 3750-ஐயும் கொடுக்க அநுமதிக்கும்படியும் கேட்கப்பட்டிருக்கிறது. எஞ்சிய 500 பவுனும் ஷை அங்கோசனர் தமது வேலையை முடித்து இலங்கையை விட்டுப் போகும் பொழுது கொடுக்கப்படல் வேண்டும். அவர் மீளும்பொழுது வேண்டிய செலவு ரூபா 2355-ம் அவருக்குக் கொடுக்கப்படும்.

ஓவசியர் ஒருவர் தற்கொலைபுரிய எத்தனித்தமை.

மட்டக்களப்புப் பகிரங்கவேலைப்பகுதியில் ஓவசியராகவிருப்பவரும் சிறிது சித்தப்பிரமை யுடையவருமாகிய ஸ்ரீ T. V. தாமோதரம் என்னும் யாழ்ப்பாணவாசியொருவர் தமதுமனைவிமக்களுடன் யாத்திரா சோக்கமாக யாழ்ப்பாணம் வந்து மீண்டும் சென்ற 17உ மட்டுக்களப்புக்குத் திரும்பினார். அங்கிருந்தும் தமது ஸ்தானமாகும் அக்கரைப்பற்றுக்குச் செல்லும்படி கல்லடியிலுள்ள மிதப்புப் பாலத்தை யடைந்து அதில் ஏறுவதற்குப்பதிலாகத் தமது மனைவியையும் பிள்ளையையும் வாவித் தண்ணீருக்குள் இழுத்துச் சென்றனர். பாலக்காரன் உடனே கச்சேரியில் நின்ற பொலிஸ்டத்திரியோகஸ்தரிடங்கூவி யழைத்தலும், அவ்வுத்தியோகஸ்தர் ஓடிவந்து மூவரையும் மீட்டனர் பின்னர் மேற்படி ஓவசியர் டிஸ்திரிக்ட் நீதிபதியிடம் கொண்டுபோகப்பட்டு அவரால் பிணையில் விடப்பட்டிருக்கிறார்.

மகா குப்பாபிஷேகம்.

இக்கிய மலையகாட்டைச்சேர்ந்த கிள்ளானில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் நிகழும் விபவ வருஷம் ஆவணியீ" (உ 20-8-28 திங்கட்கிழமை நிற்கலக்கின சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீ விக்கினேசுவரப் பெருமானுக்குப் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் விதிப்படி நடந்தேறியதென அறியலானோம்

மின்சாரம் செறிந்ததினால் இறந்தார்கள்.

மதுரையிலுள்ள பட்டின பரிபாலன சங்கத்திற்கு மின்சாரவேலை செய்யும் இருவர், சென்ற 17உ ஒரு வீட்டுக்கு மின்சார வினக்குகள் அமைத்துக் கொண்டிருந்த சமயத்தில், ஒரு மின்சாரக்கியுடைய கம்பியைத் தொட்டபோது, மின்சாரம் அவர்கள் உடம்பெங்கும் செறிந்ததினால் இறந்துவிட்டார்கள்.

குரங்கை யீன்ற குணவதி.

கேபின் கடற்கரைத் தெருவில் வசிக்கும் தாழ்த்த வகுப்பைச் சேர்ந்த ஒரு மலையின் மனைவி சென்ற 7உ குழந்தைக்குப் பதிலாக ஒரு குரங்கைப் பிரசவித்தனள். இந்த அதிசய சம்பவத்தை அநேகர் சென்று பார்த்தனர். பொலிசர் அக்குரங்கு பிறக்கவுடன் அதனைக் கொள்ளு எடுத்துச் சென்றுவிட்டனர். அரனைப் பிரசவித்தவள் சௌக்கியமாக விருக்கின்றாளாம்.

கோடி ஆண்டுகளுக்கு முன் இட்ட முட்டைகள்.

ஜப்பானில் டட்ஜர்திக்கரையில் உள்ள சானண்டவ் என்னும் ககருக்ககே தென் மஞ்சூரி இருப்புப்பாதைக் கம்பெனியார் பாலங் கட்டுவதற்காகத் தோண்டிய பொழுது இருபதடி ஆழத்தில் இருபத்தொரு முட்டைகள் அகப்பட்டனவாம். அவற்றை ஆராய்ச்சி செய்ததில் ஒருகோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த உடும்புகளின் முட்டைகளென்று சொல்லுகிறார்கள். அக்காலத்தில் உடும்புகள் இருபதடி முப்பதடி நீளம் இருந்தனவாம்.

புலிகள் ஆட்களைக் கொண்டுபோயின.

மலையகாட்டிலுள்ள கோலக்குப்புகில் தோட்டக் கூலிகள் காவ்வரைப் புலிகள் தூக்கிக்கொண்டுபோய்விட்டன அவர்களைத் தேடிப்பார்த்தபொழுது சிலரு பின்னமாகக் கிழிக்கப்பட்ட தேகங்களுடன் காணப்பட்டார்கள். இன்னும், ஒரு புகைரதஸ்தானத்திற்குப் பக்கத்தில் காலு புலிகள் நிற்பதைக் கண்ட புகைரதஸ்தான அதிகாரி காரியத்தைப் பொலிசாருக்குத் தெரிவிக்க, அவர்கள் ஆயுதபாணிகளாய் வந்தனர். அதற்கு முன புலிகள் காட்டுக்குள் ஓடி மறைந்து விட்டன.

நூல்களைப்பற்றிய குறிப்பு

அன்னபூரணாலயம்

இது ஒரு தமிழ் கவிண கதையாகும். இது வல்காளிப்பாஷையி லிருந்து மலையாள மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட பிரதியை யாதாமாகக் கொண்டு பின்னர்த் தமிழில் எழுதப்பட்டதென இந்நூல்முகத்தாலும், கதையின் போக்கு, கதையிற் றொடர்புற்றோரின் காமதேயங்களினாலும் விளங்கக்கிடக்கின்றது. இக்காலத்திற் பெரும்பான்மையும் வெளிவரும் காமசிருங்காரவர்ணனைகளோடு கூடிய கவிண கதைகள்போலாகாது இக்கவிணம் ஆடவர் மகளிர் சிறுவர் சிறுமியர் என்னுமிவர்கள் சிறிதும் கூசாது ஏற்றுப் படித்துப் பயனுறும் பண்பு வாய்க்கது. இதனை யெழுதியவர் திருவிதாங்கூர் அரசங்கத் தலைமை மொழிபெயர்ப்பாளரும் ஆங்கிலத்திலும் மலையாளத்திலும் தமிழிலும் பல நூல்களை வடமகச் செய்துள்ளவருமாகிய ஸ்ரீ T. இராமலிங்கம்பிள்ளை (M. A) அவர்களாவர். சாமானியமான பிரதியொன்றன் விலை ரூபா 1. விசேஷ பிரதியொன்றன் விலை ரூபா 1 அணா 4. பிரதிகள் இந்நூலை அச்சிட்டுப் பிரசுரித்தவராகிய ஸ்ரீ R. S. பிள்ளை, காந்தாரி அம்மன் தெரு, திருவனந்தபுரம் என்னும் விலாசத்திற்கு எழுதிப் பெறலாகும்.

நீக்கற்ற பார்வை.

இது மனுபானத்தால் வரும் அநர்த்தங்களை இனிது விளக்கும் ஒரு சிறிய தமிழ்க் கதையாகும் இதனை எழுதியவர் சுகவிரவர்த்தி இராஜகோபாலசாரியாரவர். கதை மிக இனியதும் பரிதாபமானதுமாகும். பிரதி பெரிய அட்சரத்தில் அழகுற அச்சிடப்பட்டிருக்கின்றது. நூலமுகப்பிற் காணப்படும் பார்வதி, தற்கொலை செய்யும்படி மலைப்பாறையினின்று கீழே விழும் பாவனை யாசவுள வர்ணப் படம் சிறக்கது. பிரதியொன்றின் விலை அணா 2. பிரதிகள் திருச்செங்கோடு, காகதியாச்சிரமத்திலும், மற்றும் கதர் வஸ்திராலயங்களிலும் பெறற்பாலன.

'குமரன்'' வாரபிரசுரம்.

காரைக்குடியிலிருந்து வாரந்தோறும் பிரசுரமாகும் 'குமரன்'' என்னும் சிறந்த பத்திரிகையின் 6-ம் புத்தகத்தின் முதற் சஞ்சிகை வரப்பெற்றோம். இப்பத்திரிகை நல அரிய வியாசங்களும் சமாசாரங்களும் விளம்பரங்களும் பொதிந்ததாய 20 பக்கங்களைக் கொண்டதாய் வெளிவந்திருகின்றது. சிறிய பிரமாணத்தில் ஆராய்மான இப்பத்திரிகை காலந்தோறும் வளர்ந்து பொலிவுடன் காணப்படுதல் தமிழகத்தாரெவர்க்கும் மகிழ்ச்சியைத் தருவதாகும். குமரனை நடாத்தும் அதிகாரிகளின் விடாமுயற்சியும் அபிமானமும் மெச்சற்பாலன. குமரன் சாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாக விருத்தியடைகது தமிழகத்தார்க்கு விசேஷ நன்மையைச் செய்வனென யாம் எதிர்பார்த்திருக்கின்றோம். பத்திரக்கிரயம் வருடமொன்றுக்கு ரூபா 5 ஆகும். வெளிநாடுகளுக்கு ரூபா 6 ஆகும். பெற விரும்புவோர், குமரன மனேஜர், காரைக்குடியென எழுதிப் பெற்றுக்கொள்ளலாகும்.

வாரந்தம்.

இது சென்னையிலிருந்து வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளிவரும் ஒரு தமிழ்ப் பத்திரிகையாகும். பண்டிதர் ஸ்ரீ R. S முருகேசன், ஸ்ரீ த. கா. கடராஜர் என்னுமிவர்களே இப்பத்திரிகையின் ஆசிரியர்களாவர். பல அரிய வியாசங்களும் சமாசாரங்களும் இப்பத்திரிகையிற் காணப்படுகின்றன. பத்திரிகை 12 பக்கங்கள் கொண்டது. பத்திரக்கிரயம் உள்நாட்டிற்கு ரூபா 4. வெளிநாட்டிற்கு ரூபா 5 ஆகும். இதனைப் பெற விருமபுவோர், மனேஜர், 146 பிருட்வே, சென்னை என்ற விலாசத்திற் பெற்றுக்கொள்ளுதலாகும்.

எமது பார்வைக்கு அனுப்பிய புத்தகப் பிரதிகளையும் பத்திரிகைகளையும் நன்றியுதியுடன் ஏற்று உவந்தாம்.

காணிவிற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டில்

கோயிலாக்கண்டி சோமாசுந்தரம் சின்னையா பென் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் ஆதனத்தின் பேரில்.

உரிமைத் தத்வ
வழக்கு இல. 6532.

மேற்செல்லிய வழக்கில் எனக்கு அனுப்பப்பட்ட கட்டளைப்பிரகாரம் கீழே குறிக்கப்படும் காணி, 1928-ம் ஆ செப்டெம்பர்மீ 1உ 4-30 மணிக்கு அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த லலத்தில் என்னால் விற்கப்படும்.

வண்ணார்பண்ணை கிழக்கிலிருக்கும் பா. இ. இ. 6ீ, கொண்டகாணியும், வீடும், கிணறும், அதைச்சேர்ந்தவைகளும், எல்லைகிழக்கு, சபாபதிப்பிள்ளை சிவகுருநாதரின் உரிமைக்காரரின் ஆதனம், வடக்கு, பிரேட்டி, மேற்கு முருகேசபிள்ளைத்தம்பியினதும் சிதம்பராநாதச் செட்டியாரின் மனைவியினதும் ஆதனங்கள், தெற்கு கதிரவேற்பிள்ளை முத்துகுமாருமி னுதனம். இதில் அரைவாசி.

V. A. துரையப்பா,
கொமிஷனர்.

யாழ்ப்பாணம்,
1928-ம்ஆ ஆகஸ்ட்மீ 7உ.
(Mis 1280.)

உயர்நரத் தமிழ்ப் பாடங்களின் பேரில்.

நாம் மொழியாகிய தமிழ்நினுமினிய தமிழ்மொழியின் வாசி கருதி, மதுரை நிதயம் சென்னை யாழ்ப்பாணம் முதலிய இடங்களிற் சங்கங்கள் அமைத்துப் பிரவேசபண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் வித்வான், சிரோமணி முதலிய நெற்புப் பெயர்களாகிய வித்தியாபட்டங்களைப் பெறத்தக்க பரீக்ஷைகளை நியமித்து நடத்திவருகின்றனர். அப்பரீக்ஷைகளிற் சென்று சித்தியெய்தினோரும் ஆங்காங்குப் பலருளர்.

இப்பரீக்ஷைகளிற் சித்தியெய்தினோர்க்கு ஜீவனோபாயமாகக் கிடைக்கத்தக்க பேறென்ன? சென்னை ராஜதானியிலுள்ள சங்கங்களிற் சித்தியெய்தினோர் ஆங்காங்குள்ள ஆங்கில கலாசாலைகளில் தமிழ்ப்பண்டிதர்களாக ஏற்றுக்கொள்ளத்தக்க தகுதியுடையராயிருக்கின்றனர். நம் யாழ்ப்பாணத்துள்ள 'ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பரீக்ஷைகளிற் சித்தியெய்தினோரும், 'மதுரை தமிழ்ச்சங்கம்' முதலிய சாஸ்கங்களின் பரீக்ஷைகளிற் பிரவேசித்துச் சித்தியெய்திய யாழ்ப்பாணத்தவர்களும் யாதகெய்யப் போகின்றார்கள்! யாழ்ப்பாணத்தில் ஆங்கில கலாசாலைகள் ஒருகிலவேயிருக்கின்றன; அவற்றில் தமிழ்ப்பண்டிதர்களின் தேவையும் அத்தனையாகவியகமன்று; ஒருபோது வேண்டினும் மலிவாக இந்திய பண்டிதர்கள் கிடைக்கத்தக்கதாக விருக்கிறது. ஆகவே யாழ்ப்பாணத்துத் தமிழ்ப்பண்டிதர்களின்பாடு திண்டாட்டமாகின்றது. இவர்கள் தமிழ் வித்தியாசாலைகளிலும் உபாத்தியாயர்களாக ஏற்றுக்கொள்ளத் தகுதியற்றவர்களாக விருக்கின்றனர், எங்கள் அரசினர் பிரமாணப்படி இப்போது ஒரு தமிழ் வித்தியாசாலையில் உபாத்தியாயராகப் பதிவு செய்யப்படுமொருவர் அரசினரால் நடத்தப்படுகிற உபாத்திமைப் பரீக்ஷைகள் ஏதுமொன்றிற் சித்தியெய்தித் தகுதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்; அல்லது அப்பரீக்ஷைகள் ஏதுமொன்றிற்கு அடுத்துச் செல்வதாக உறுதிபண்ணல் வேண்டும். இவ்விதி எதற்காகவெனில், "1931-ம் ஆண்டில் உதவி ஸ்கோலைபெறும் வித்தியாசாலைகளிலுள்ள உபாத்தியாயர்களெல்லாம் உபாத்திமைப் பரீக்ஷைத் தகுதிப்பத்திரம் பெற்றவர்களாயிருத்தல் வேண்டும்" என்பதைப் பூர்த்திசெயதற்கே.

ஆகவே நம்மவர்கள் மேற்காட்டிய சங்கங்களின் பரீக்ஷைகளிற் பிரவேசித்து வினைக்கெட்டுக்கொண்டிராமல் அரசினரால் நடத்தப்படும் உபாத்திமைப் பரீக்ஷைகளில் நேரில் பிரவேசிப்பதே தக்க உபாயமாகும். தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும், ஆங்லாபத்துக்காகவும் ஷெ சங்கப் பரீக்ஷைகளிற் சித்தியெய்தினோரை, உபாத்திமைப் பரீக்ஷை மூன்றுக்கு தகுதிப்பத்திரம் பெற்றவர்கள் பேலாகவாவது, அல்லது அற்பதமிழறிவுடையவர்களாயினும் பத்துப் பதினைந்து வருஷம் வித்தியாசாலையிலிருந்து அதற்காகத் தகுதிப்பத்திரம் பெற்றுக்கொள்பவர்கள் பேலாகவாவது நமது அரசினர் ஏற்றுக்கொள்வார்களாயின், தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும் ஆங்லாபத்துக்காகவும் கற்கின்றோமென்பார் பலருளராவர். நற்காலம் கல்வியில்வாரெல்லாருக்கும் இலக்கு ஜீவனோபாயமே யென்பது வெளிப்படை.

ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்திற்குத் தலைவர் இலங்கை அரசினரின் வித்தியாகர்த்தராகும். ஆகவே அரசினரால் நடத்தப்படும் ஷெ சங்கப் பரீக்ஷைகளின் பேறு அரசினர் அங்கீகரித்தற்கே உபாத்திமைத் தொழிலுக்குத் தகுதியற்றதாயின் இச்சங்க மேனோ நடத்தப்படுகிறது! இச்சங்கம் வித்தியாகர்த்தமைத் தலைவராகக் கொண்டிருக்கும் பயன்யாது! கனம் தேசாதிபதியவர்களின் கைச்சாத்தோடு கொடுக்கப்படும் தகுதிப் பத்திரங்களின் பயன்யாது! இவர்களது வித்தியாபட்டங்களும் பத்திரங்களும் காற்றிற் பறக்கவிடவே தக்கனபோலும்! வெட்கம்! ஆகலால் ஷெ சங்கப் பரீக்ஷைகளிற் சித்தியெய்திய பண்டிதர்கள் யாவரும் ஒரிடத்துக் கூடி சென்னை ஆலோசித்துச் சங்கத்தலைவர் மூலமாகச் சட்டநிருபண சபைக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பித் தாம் தேறிய பரீக்ஷைகளின் பேறு உபாத்திமைத் தொழிலுக்குத் தகுதியுள்ளதாமாறு ஆக்குவித்துக் கொள்வது அவசியமாகும். ஆங்கிலத்தில் B. A: முதலிய வித்தியா பட்டங்களைப் பெற்றுள்ள ஆங்கில பண்டிதர்களைத் தகுதியாக ஏற்றுக்கொள்ளும் அரசினர் தமிழ்ப்பண்டிதர்களை மட்டும் அலட்சியம் செய்வது நியாயமாகாது.

நாம் திந்நிரை செய்யுங்காலத்தில் படுக்கையைக் குறித்துக் கவனிக்கவேண்டிய விஷயம்.

கந்தபுராணம் இரண்டாநாட் குரபன்மன் யுத்தபடலத்தில் "பஞ்சடி நூறாப் பதமாகோயில்போ, யஞ்சிய மெடுத்தமெல் லமளி மேலுறு, என்றுஞ் செய்யுளிலே அஞ்சமளி யென்றுஞ் அஞ்சிடுத்த மெல்லமளி யென்றும் நூலாசிரியர் விதந்து கூறினர். எதற்காகவென்றால் மூவைந்தடிக்குமெத்தை யென்பதைக் காட்டுதற்கே, மூவைந்தடிக்கு மெத்தை யென்றது என்னையெனில் நாம் படுக்கும் சயனவரையில் மூன்று கட்டிலிட்டு அவற்றில் தனித்தனி ஒவ்வொன்றிலும் முதலில் இலவம்பஞ்சு மெத்தையிட்டு அதன்மீது அதிலும் மென்மையாகிய செம்பஞ்சு மெத்தையிட்டு அதன்மீது அதிலும் மென்மையாகிய மயிலின் கழுத்து மயிராலாகிய மெத்தையையிட்டு அதன்மீது அதிலும் மிருதுவாகிய கூட்டுறவால் செய்யுறுகி உதிர்க்கும் அன்னத்தின் றிறலெனுமிய மெத்தையையிட்டு அதன்மீது அதிலும் மிருதுவாகிய மல்லிகை முதலாகிய புஷ்பங்களின் காம்புகளை நீக்கி அமைக்கப்பட்ட புஷ்பசயனத்தையிட்டு இப்படிப் பதினைந்துக்கு மெத்தையாயடுக்கிய மூன்று கட்டிலுள் அம்மூன்றி லொன்றில் ஸ்திரீ புருஷர்களாகிய இருவரும் கூடச் சயனித்தலும் ஏனைய இரண்டிலும் குரபன் மனும் மனையாளும் ஆகிய இருவரும் தனித்தனி சயனித்தல் இயல்பு. இப்பொழுது குரபன்மன் சென்று தான் தனியே சயனிக்கும் கட்டிலில் பஞ்சசயனத்தின்மீது இருந்தான் என்பது போதருதற்கேயே. இதனை "மூவைந்தடுக்கி" என்றும் சித்தமணிச் செய்யுளாலும் நன்கு யறிந்துகொள்ளலாம். இப்பிரகாரம் சயனிப்பது அரசர்கள் செல்வவான்களுக்கேயாம்; இதனால் சாமான்யகாலத்தவிர ஏனைய காலங்களில் ஸ்திரீ புருஷர்கள் தனித்தனி சயனிக்க வேண்டுமென்பது ஆயுர்வேதக் கொள்கை. நிற்க,

நாம் படுத்தற்குரிய படுக்கை பிராணிஜம், ஔஷதம், நிலர்க்கம், என மூவைப்படுமெனவும் அவற்றுள் பிராணிஜம் என்பது பட்டு, தோல், கம்பள மாதியனவும், ஔஷதமென்பது கோரை, புல், முதலியவற்றாற் செய்யப்படுவனவும், நிலர்க்கமென்பது புல் நிறைந்தபூமி கொடிகுழ்ந்தடர்ந்த இடமெனவும், இவற்றுள் நிலர்க்கமென்பது சங்கியாசிகளுக்குத் தகுதியுடையதாகி இல்லறத்தாருக் காகாதது எனவும், பிரமசாரி வானப்பிரஸ்தர்கள் அகப்பட்டதெதுவோ அதை உபயோகிக்கலா மெனவும், இல்லறத்தவர்கள் ஔஷதமென்ற கோரை முதலியவற்றாலாகிய படுக்கையையே உபயோகிக்க வேண்டுமெனவும், விரத முதலிய காலங்களில் பிராணிஜம் என்கிற தோலை உபயோகப் படுத்தலாமெனவும் பட்டை உடுத்திக்கொள்வதற்கு மாத்திரம் உபயோகிக்கலாமேயன்றிப் படுக்க உபயோகிக்கக் கூடாதெனவும் ஆயுர்வேதங் கூறும். தோல் என்பது மான்றோல் புலித்தோல் முதலியன; இவாறு தக்க படுக்கையைத் தேடிக்கொண்டு மற்றவர் பிடிக்கையோடு கலவாமல் தனியாகவே வைத்துக் கொள்ளவேண்டும். தமையன், தம்பி, மகன், மகள், பிதா, மாதா இவர்கள் பிடிக்கையோடு கூடவும் கலந்திருக்கவுங் கூடாது. கலந்திருந்தாற் பலவகை நோய்களுண்டாகும்.

ஒருவர் படுத்த படுக்கையில் அவரது சரீர மலம் அடியோடு சம்பந்தப்படும். அது பிடிக்கையிற் சம்பந்தித்து அதை அசுத்தமாக்கி விடும். அன்றியும் அது காய்ந்துபோகவே விஷமாய் விடும்; அதை நாம் படுக்கையாற் கண்டுகொள்ள முடியாது. அதிலும் ஒருவர் இருந்து எழும்பிய இடத்திலறியலாம். அவ்விடம் சரீர ஆவியால் நிறைந்திருப்பது அனுபவத்திற் கண்டுகொள்ளலாம் படுக்கையும் அவ்வாறு இருக்குமென யூகித் தறிந்துகொள்ளலாம். ஆலமரத்துள் பிள்ளைப்பேற்ற வீட்டில் உபயோகித்தலும், சலமிருத்தலும், நிழிந்ததும், பழுதி நிறைந்ததும், குழந்தைகள் படுத்ததும், நீசத்துஷோகிகள் உபயோகித்ததும், பிறர் படுத்ததுமான படுக்கைகளிற் படுக்கக்கூடாது. அன்றியும் இவைகளைக் கையால் தொடுவதுங் கூடாதென்றும், தொட நேர்ந்தால் உடனே ஸ்நாநஞ் செய்வ தெனவும் விதி கூறப்பட்டது. நாக வஸ்திரத்துடனும், நிர்வாணமாகவும், படுக்கக்கூடாது. சொறி சிரங்கு காய்ச்சல், குஷ்டம், சுவாசகாசம், க்ஷயம், இந்நோயுள்ளவர்கள் படுத்த படுக்கையிலாவது இவர்களுடன் ஒருமலையிலாவது படுக்கக் கூடாது. கூடியவவு உயரமான இடங்களில் படுக்கவேண்டுமென்று கூறியது. உயரமான இடமாவது கட்டில், விதிப்பலகை, முதலியனவாம். பூமியில் சம்பர்ப்பப்படாமலிருக்கிற மேன்மாடியுமாம். மேன்மாடியில் கட்டிலில் படுத்தால் அதிக நன்மையாம். பஞ்சு, புல், தோல் முதலியவற்றாலான மெத்தை விசேஷம். முக்கில், பிரம்பு தென்னங்கயிறு முதலியவற்றாலான கட்டில் மிகவும் உத்தமம்; இவைகளை கட்டிலில் பஞ்சிட்ட மெத்தையில் படுப்பது எல்லாருக்கும் உசிதமாம். கட்டில் கிடைக்கப் பெறாதவர் கோரை முதலியவற்றாற் செய்த பாயிற் படுக்கவேண்டும். மரக்கட்டில்களும் அத்தி, அரக, இச்சி, ஈரால், ஆல் முதலியவற்றாற் செய்தவைகளாக கூடா. எனெனில் அரசில் அக்கினிக்கூறு அதிகமாதலால் குடிகிகம். அத்தி ஈரால் இவைகளில் குளிர்ச்சி அதிகம்; ஆல் வாயுரோகத்தை அதிகப்படுத்தும்; இச்சிலிற் பித்தமதிகம்; ஆதலால் இவைகளை மரப்பலகைகளாற் செய்யப்பட்ட படுக்கைகளிலுக்கவேண்டும். வேம்பு, பலா, மா இவற்றின் பலகைகளாற் செய்யப்பட்ட கட்டில் மிக வுத்தமமெனவறிக.

படுத்து நித்திரைசெய்யுங் காலத்திலே மனதில் கலகலையொன்றையும் வைக்கக்கூடாது. வெறுந் தரையிலும் தனிப்பலகையிலும் படுக்கக் கூடாது. காற்றே இல்லாத இடத்திலும் அதிக காற்றுள்ள இடத்திலும் மேற் கூரை யில்லாமல் நிற்றிருக்குமிடத்திலும், கொசுகு, மூட்டுப்பூச்சிகள் உள்ள இடத்திலும் படுக்கக் கூடாது. (வரும்.)

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்,
அம்மன்கோயில்,
சதுமலை.

இலங்கைப் புகைரதப் பிரயாணிகளின் வசதியீனம்.

நான் சென்றமாதத்தில் எதோ காரணார்த்தமாய்க் கொழும்பிற்குப் போகும்படி நேர்ந்தது. நான் ஏறிச்சென்ற பெட்டியில் 37 பேரிருக்க வேண்டுமென்று எழுதப்பட்டிருந்தது. ஆனால், அவிதிக்கு மாறாக 50 பிரயாணிகள் வரை ஆடு மாடுகளைப் போல் அங்கு நின்றபோட்டர் என்பவரால் நிரைக்கப்பட்டனர். அவரைர் கொண்டுவந்த மூட்டை முடிச்சுகளைத் தலையில் வைத்தவர்களும், ஆசனமாகப் போட்டிருந்தவர்களுமாய் முன்பின் திரும்ப இடமின்றி ஒருவரொடொருவர் நெரிபட்டு நின்றனர். அடுத்த பெட்டியில் சனங்கள் அவிதிப்பட்டு ஏறாதபோதும், ஒரு பையனை நெரித்துவிட்டார்கள். பையன் 'ஐயோ! ஐயோ!' வென்று, பையனின் தகப்பனும் கூக்குரலிட ஒருவாறு விடுவித்து அதற்கடுத்த பெட்டியிற் கொண்டுபோய் ஏற்றினார்கள். சனத்தொகைக் கேற்ற பெட்டிகள் தொடுக்கப்பட்டால், இவ்விதச் சங்கடங்கள் ஏற்படாவன்றோ? பிழைப்புக்காக ஓடித் திரியும் பல், வொறி ஆயிரத்தில் எண்ணிக்கைக்குமேல் ஒருவர் இருவர் தெரிந்து தெரியாமல் ஏறியிருப்பது கண்டால், அதைக் குற்றமாகக் கண்டு அபராதம் விதிக்கப்படுகின்றது. அங்ஙன மிருக்கப் புகைரதப் பெட்டிகளில் குறிப்பிட்ட தொகைக்கு மேலதிகமான பிரயாணிகளை ஏற்றிச்செல்வது நியாயமா? இது மாமியார் உடைப்பது மட்குடம் மருமகள் உடைப்பதுபொற்குடம்என்பதுபோலும், நிர்க,

புகைரதத்திற் பிரயாணஞ் செய்வோரில் மிகுதியானோர் எழுத்தறிவில்லாதவர்களாயிருக்கின்றனர். இவர்கள் தாங்கள் குறிப்பிட்ட தானத்தைக் கண்டு இறங்கிக்கொள்வது அசாத்தியமாயிருக்கின்றது. ஒவ்வொரு நிலையத்திலும் பெயர்ப்பலகை கட்டப்பட்டிருக்கின்றதுதான். என்றாலும், அதைப்பார்த்துச் சொல்லவும் இன்னொருவருடைய துணையின்றி முடியாதாகும். புகைரதத்தின் முறபாகத்திலும் பிற்பாகத்திலுமுள்ள நிலையங்களுக்கு நடுப்பாகத்தின் சேரே நாட்டப்பட்டிருக்கும் பெயர்ப் பலகை நன்றாய்த் தெரியமாட்டாது. இராக்காலங்களிலோ கற்றவர்களும் தமோற்றமடையத்தான் வேண்டும். இந்நிலைமையில் எழுத்தறியார்பாடு பெருந்திண்டாட்டமாகவே முடிகின்றது. குறித்த தினம் ஒரு சிங்கள மனிதன் இவ்வாறு இறங்குமிடத் தெரியாது தேடவை இறங்கப் போக அங்கிருந்தவர்களால் தடைசெய்யப்பட்டதை நான் கண்டிருக்கிறேன். ஆகையால் இவ்விதக் குறைகள் சோரணணம் புகைரதம் நிற்கும் ஸ்தானங்கள் தோறும் அவ்வவற்றின் பெயரைப் பெரிய சத்தமிட்டுக் கூறுவதற்கு ஒருவரை நியமிப்பது பெருதலாக யாவருக்கும் நலமாயிருக்கும். இவ்வழக்கம் நம் தாய்நாட்டில் எங்கும் கடைத்தலைகின்றது.

மூன்றாந்தாகப் பிரயாணிகள் தங்கள் சந்திக்கேறுவாற எதேனும் மூட்டைமுடிச்சுகளைக் கொண்டு செல்வது சகசம். இப்படிக் கொண்டு செல்வோருள் மிகவும் ஏழை எளியவர்களாயுள்ளவர்களைக் காணின், 'போட்டர்'மார் 'ஏய், நீயா அங்கே கொண்டுபோ, இங்கே கொண்டுவா; அதை நீறை போடவேண்டும்; இதை நிறுக்கவேண்டும்' என்று பலமுறத்தின்றனர். பாவம்! இப்பேதைகள் இதனால்தங்களுக்கு கட்டமுண்டாகுமோ, அல்லது பயணர் தடைப்படுமோவென்ற பயத்தினால் 10சதம் 20சதம் கொடுத்துவிடுகின்றார்கள். போட்டர்கள் எதிர்பார்ப்பதும் இதைக் குறித்ததுதான். அங்ஙனம் ஏழைகளிடம் கைக்கூலி வாங்கிக்கொண்டபின் அவர்கள் கொண்டுவந்த சாமான்களின் நிறைகுறைவாகக் காணப்படுகின்றது. இப்போட்டர் புலிகளின் தந்திரம் வாய்ச்சட்டை சப்பாத்தோடு தொப்பி போட்டவர்களிடத்திலும், சற்று உடை நடை பொலிந்தவர்களிடத்திலும் வாய்ப்பதில்லையாகும், தாங்கள்செய்வது நியாயவிரோதமாதலால், இவர்கள் மூலமாய்த் தங்கள் தொழிலுக்கு ஏதம் ஆபத்து விளையுமோவென்றுங்கிட்டே நெருங்குவதில்லை. இவ்விதத் தந்திரங்கள் பெரும்பாலும் ஏழுதாரனையிலும், மற்றுஞ் சிற்சிலவிடங்களிலுங்காணப்படுகின்றன. புகைரதப் போக்குவரவு சனங்களுடைய வசதியைக்குறித்தியாதலால், அதற்கு மாறுகக் காணப்படும் வசதியீனங்களைப் பொதுசனத் தலைவர்கள் கவனிக்கவேண்டும்.

க. க. தனபாலன்,
மானிப்பாய்.

விளம்பரம்.

யாழ்ப்பாணம் அரசாட்சியார் விநாயகர் காலைக்கு, கீழே குறிக்கப்பட்ட முடிக்குரிய காடுகளிலிருந்து விறகு வெட்டுவதற்குக் கேள்விப்பத்திரங்கள் புரட்டாதி மாட 11உ செவ்வாய்க்கிழமை வரைக்கும் ஏற்கப்படும்:-

கிராந்தி	4500 தொன்விறகு
வேடுக்கோடு	1000 ,,
மண்டைக்கல்லார்	4500 ,,

முழு விபரமும் யாழ்ப்பாணம் உதவி வனபரிபாலனர் கந்தோரிலும் ஆவணிமட 17உ வெளியாகும் 7659-ம் இலக்க கம்பத்திரிகையிலும் அறிந்துகொள்ளலாம்.

J. D. CARIENT
Conservator of Forests.
வனபரிபாலனர்கந்தோர், } வனபரிபாலனர்.
கச்சேரி. 13-8-28
(G. 955)

வேலணை சரசுவதி வித்தியாசாலை.

1926-ம்ஆ ஜூன்மீ 28உ தொடக்கம், 1928-ம்ஆ ஜூன்மீ 30உ வரைக்குமுள்ள வரவு செலவுக் கணக்கு வெளியீடு.

பெயர்.		ரூபாசத.
ஸ்ரீமை விஜயரெத்தினம் யாழ்ப்பாணம்		300
கௌரவலவ துரைகவாமி	,,	45
லவ இராசகோபால்	,,	250
இர்தமகள்ளூரிர் தளபாடத்தகு உதவியது		280
இர்துவிதநிய விருத்திச சங்கத் தருமக்காக		150
ல கிலுரானம யாழ்ப்பாணம்		15
இ கர்தையா	,,	12
மு சின்னையா வர்த்தகர்	,,	10
மு. கர்தனம்	,,	10
ட. சி ஐயாத்துரை	,,	10
ரா அமிர்தலிங்கம்	,,	10
க வைத்தியலிங்கம்	,,	7 50
ச. சின்னத்தம்பி	,,	2
மு. தீசமுத்தரம் வேலணை கிழக்கு		170
லே அம்பலவாணர்		
V. A Kandan வேலணைகிழக்கு		120
ஐ ஆசாபிள்ளையும் மற்றபிருமு வேலணை-கிழக்கு		500
அ கிலகுரு வர்த்தகர்	,,	76 10
க ரா வைத்தலிங்கம்	,,	5
மு. சதாசிவ	,,	48 90
கா பொலனாபலம்	,,	30
க சின்னத்தம்பி வர்த்தகர்	,,	30
வ கண்பதிப்பிள்ளை	,,	20
நீ இ ராசலிங்கம்	,,	20
கார்க்காரர்	,,	17 50
சி. செல்லப்பா விதானை	,,	17 50
க க இராமலிங்கம்	,,	15
ச.ஆறுமுகம்குத்தகைகாரன்	,,	15
அ. இராமலிங்கம் உடையார்	,,	11
ரா வைத்திலிங்கம்	,,	10
ச க கலிங்கம்	,,	10
ரா ராசலிங்கம்	,,	10
வ. கணபதியார்	,,	10
நீ க. நாகலிங்கம்	,,	10
ரா சாபாபதிப்பிள்ளை	,,	10
நீ இ. சங்கரப்பிள்ளை	,,	10
வி. கணபதிப்பிள்ளை	,,	10
சி வைத்திலிங்கம்	,,	10
வே கணபதி	,,	10
ஐ கணபதிப்பிள்ளை	,,	10
வி. கார்த்திகேசர்	,,	10
வெ சத சிவப்பிள்ளை கொத்தாரிஸ்	,,	10
லே இளையதம்பி	,,	5
ரா. கர்தையா	,,	5
ச க அன்னமுலை	,,	5
சி க காசிப்பிள்ளை	,,	5
ம. இலிங்கப்பிள்ளை	,,	5
வி கணபதிப்பிள்ளை	,,	5
கு மயில்வாகனம்	,,	5
க ஆ கர்ப்பு	,,	5
ச சுந்தரபிள்ளை	,,	3
மா. கர்தையா	,,	3
அ இளையதம்பி	,,	3
ரா சின்னத்தம்பி	,,	2 50
ச மயில்வாகனம்	,,	2
க. பொன்னையா	,,	2
சி நாகமணி	,,	2
வே அமுதலிங்கர்	,,	1 50
ச நி வேலுப்பிள்ளை	,,	1
தா பொன்னையா	,,	1
அ சபாரெத்தினம	,,	1
ஈ பேரம்பலம	,,	1
வே நாகலிங்கி	,,	1
அ ந நிரவலு	,,	1
க வீரகத்தி	,,	1
ச நாகமணி	,,	50
சே பொன்னையா வர்த்தகர்	,,	45
வேலணை-மேற்கு		220
கா சி சபாபதி வர்த்தகர்	,,	40
அ தி செல்லத்துரை	,,	25
மா சாமுவேலமுத்து Sub P.M	,,	15
அ பொன்னையா	,,	10
வை செல்லையா	,,	10
ஆ பாலப்பிள்ளை	,,	10
மு பரமன்னம்பலம்	,,	7 50
வ தபாலதிபர் Post Master கோலப்பிலா		5
ஸ திருநாவுக்கரசு		90
செ சாமுவேலமுத்து பரான்		80
N S லிங்கம் Surf காலி		50
வி தம்பிப்பிள்ளை வர்த்தகர்		50
சி கா நாகலிங்கம்	,,	60
சி கா சின்னத்துரை	,,	25
N 2 மாமேதிரசிங்கம்	,,	15
அ இராசாரா வர்த்தகர்	,,	15
சு மயில்வாகனம்	,,	10
D. குருநாதர்	,,	10
P வைரநிலவ வர்த்தகர்	,,	10
V S கனகசபை	,,	10
கா தம்பையா	,,	10
ரா க செல்லையா	,,	10
ம. சி கனகையா	,,	10
வே கதிரப்பிள்ளை	,,	10
சி க கருணையா	,,	10
சு செல்லத்துரை	,,	10
வி ர தாமாபிள்ளை	,,	10
வி ச மயில்வாகனம்	,,	10
வே சி குமாரசுவாமி	,,	5
பு முருகேசு	,,	5
ரா செல்லத்துரை	,,	5
A கப்பிரமணியம்	,,	5
க சி சுருமுத்தலிங்கம்	,,	5
ஸ்ரீ ரா க கதிரெத்தினம்	,,	5
ரா கர்தையா மடை	,,	5
க மு பொன்னையா	,,	5
ஆ முத்தத்தம்பி	,,	1 50
V M நாகலிங்கம்	,, கொங்காலை	50
சி இ தாபிப்பிள்ளை	,, காவத்தை	40
V நாகலிங்கம்	,, ,,	5
S V முத்துத்தம்பி	,, ,,	3
மு வே முத்தையா பிள்ளை	,, ,,	3
ச பெ சி	,, ,,	3
ரா சதாசிவம்	,, ,,	2
K P இராசையா Clerk நிலிற்றிக்கலை		25
க ஆ சிவசம்பு வர்த்தகர் அம்பலாங்கொடை		25
சி தம்பு வர்த்தகர்	,,	10
ரா செ வலித்திலிங்கம்	,,	5
சு தலவித்திலிங்கம	,,	3
நீ க கர்தையா	,,	3
ம பொன்னையா	,,	2 50
ரா செல்லப்பா	,,	2 50
ரா மருதப்பு வர்த்தகர் அம்பலாங்கொடை		2
வ சி மயில்வாகனம்	,,	2
V நவரெத்தினம Head Overseer பன்னிமடு		25
ரா சி வர்த்தகர்	,,	15
க ஐயாத்துரை Overseer	,,	15
க கந்தசாமி Sub Overseer	,,	10
M கர்தையா Chief Clerk	,,	10
இ அம்பலவாணர் வர்த்தகர்	,,	10
V S Joseph	,,	7 50
லே கர்தையா	,,	5
A கர்தையா Overseer மாதமடை		25
V குமாரசுவாமி	நக்குவான்	25
ரா முத்தையா வர்த்தகர்	,,	10
ரா இராமனாதபிள்ளை	,,	5
ரா வ	,,	5
S சாமிச்சரம்	,, காவத்தை	5
கா வி சின்னத்தம்பி	,, அக்குறுகி	25
ரா வ வெலுனாபிள்ளை	,,	20
A வேலாயுதர் ஓவியர்	,,	20
K நாகராசா	,,	15
வ க சிதம்பரப்பிள்ளை வர்த்த	,,	5
ரா சின்னத்தம்பி	,,	5
N தில்லையம்பலம் Head Overseer மாத்துறை		25
ரா சரவணமுத்து வர்	,,	5
க இ தம்பாபிள்ளை	,,	5
கா சி பொன்னம்பலம்	,,	5
சி பொ ரா செ	,,	2 50
க சர்குரு	,,	2 50
ரா கணபதிப்பிள்ளை	,,	2 50
ஆ சின்னத்தம்பி வெருவலை		5
க அ சின்னத்துரை சமுத்துறை		10
வி க பாலசிங்க பாணக்துறை		2
S செல்லமுத்து Broker கொழும்பு		50
M முத்தத்தம்பி	,,	50
கா நாகலிங்கம் வர்த்தகர்	,,	25
வை சி முத்தத்தம்பி	,,	25
அ ஆறுமுகம்	,,	10
க சி கர்தையா	,,	10
வே மு வே	,,	10
அ க	,,	10
வி முருகேசு	,,	5
சு தம்பிப்பிள்ளை	,,	5
ரா சின்னத்தம்பி	,,	5
வே செல்லத்துரை	,,	5
சு கா சிதம்பரபிள்ளை	,,	5
சு முருகுட்டி	,,	5
வீ ரா சித்தம்பலம்	,,	5
க ரா பொன்னையா	,,	5
வி குமாரசாமி	,,	5
ம குமாரசாமி	,,	5
க ம சதாசிவம்	,,	5
மு க கர்தபிள்ளை	,,	5
மு வாதலூர்	,,	5
செ ச	,,	5
ரா சங்கரப்பிள்ளை	,,	5
வே மு வேலுப்பிள்ளை வர்த்தகர் டெனியாய்		20
S M செல்லையா ஓவியர்		20
அ முகாமு வர்த்தகர்	,,	5
பொ ராசலிங்கம்	,,	5
ஆ இ	,,	5
அ முருகேசு	,,	4
ரா மு செ மா	,,	2 50
சி இ தம்பு வர்த்தகர் அப்றாவலை		20
ரா முருகேசு	,,	8
மு தம்பையா Clerk வெள்ளவத்தை		20
M இராமுப்பிள்ளை ஓவியர் குளனாவே		15
மக்கர்தையா வர்த்தகர் கிதோட்டை		10
மா கர்தையா	,,	5
ரா குமாரசாமி	,,	2
சு மு ராசலிங்கம்	,, இக்கிடுவா	10
க ச தாமோதரம்பிள்ளை	,, அல்பிற்றி	10
மு தாமையா	,,	10
இ அருளம்பலம்	,,	10
க மு சதாசிவம்	,,	5
சே ஆறுமுகம்	,,	5
சி க. ஆறுமுகம்	அல்பிற்றி	2 50
வி ச செல்லப்பா		2
லீ. கு. சிறிசேக		1
N நல்லதம்பி ஓவியர் வெள்ளாத்துறை		10
S வெங்கடாசலம்	,,	10
K. R முருகேசுபிள்ளை வர்த்தகர்	,,	10
A ராகாதாரப்பேதிக்கி	,,	10
ச அ	,,	2
வ ம செல்லையா	,,	2
க வே. துரையப்பா	,,	10
க சாலமோ	,,	10
A. தில்லையம்பலம் Head Overseer. சிரத்தினபுரி		3
S. நாகலிங்கம் முதலியார்		10
மா. கர்தையா	,,	10
S. வேலுப்பிள்ளை	,,	5
ஸ்ரீ செ க.	,,	5
E சுப்பையாபிள்ளை	,,	2
அ. நாகலிங்கம் வர்த்தகர் தொடர்தலவ		5
ஆ செல்லத்துரை வர்த்தகர்	,,	5
ச ஐயம்பிள்ளை வலப்பிட்டி		5
சி வைத்தியநாதர்	,,	2 50
மு சி. பொன்னம்பலம் அக்கரம்		10
க சுப்பர் புளியங்கூடல்		3
இலங்கைச் சைவவித்தியாவிருத்திச சங்கத்தார் கட்டுக உதவியது		350
சி. வீரகத்திப்பிள்ளை கடனாகத் தர்த தொகை		390
சி லவ கோட்டேமுதி வடுத்தது		216
ஊரவர்களுதவிய பணியின் விலை		620
ஆக மொத்த வரவு		5978 95

செலவு.

ஸ்ரீ க சே, வல்லிபுரமகர்ன் உபயம் நல்லப்பரப்பு—11

	ரூ.	சீ.
அத்திவாரச் செலவு	47	49
கொட்டில் 2 வாங்கினது	15	
கல்லு பணல் சுண்ணாபு	425	85
மேசன் கூலி	277	01
மூட்டான் கூலி	233	92½
வளி தரக்கீலி கடகம் ஆணி கறப்பு	36	24
கொன்கிறீற்றுக் கல்லு	39	20
தண்ணீர் கண்டல்	48	12
சிமெந்து 14 பீப்பாவும் செலவும்	186	85
ரூக்கல்லும் கூலியும்	94	20
பனைமரவேலை	592	28
பலைமர வேலை	328	13
கோப்பிரவேலை	290	
கிடுகு கயிறு மேச்சல் கூலி	69	7
மணவேலை	184	9½
பிரவேசச் செலவு	59	42
தளபாடங்கள்	403	18
புத்தகம் தையல்சாமான் தபால் முத்திரை	102	79
சமையல் கொட்டில் செலவு	16	55
பிரஆர் போக்குவரவுச் செலவு	238	31
நிலு 6000, உடைவு 200, முட்டோடு 16.	832	85
உபாத்திமார் சம்பளம் சங்கம் கொடுத்த நிறத சீக்கி	522	52
ஊரவர்கள் தர்த பனைகளின் விலை	620	
இருப்பு	315	
ஆக மொத்தம் செலவு	5978	95

இன்னும் நடக்கவேண்டிய வேலைகளாவன,

	ரூ.	சீ.
1. ஸ்ரீ சி வீரசத்திப்பிள்ளைக்கும் மறபோருக்கும் கொடுக்குமதி	956	
2. இன்னும்வேண்டியதனபாடல்கள்	200	
3. உதவிஉபாத்தியாயர்கள்வேதனம் கலம்பர் முடிய	1220	
4. தனத்திர்குக்கொன்கிறீற்றுப் போட	800	
5. கட்டிடவேலைக்கு	156	
6. பலைத்தூண்கள் 6க்கு	50	
7. நிலத்திலிருந்து நீர்மட்டம் வரைக்கும் சிமெந்துப்பூச	200	
8. நீர்மட்டத்திற்குமேல் சுண்ணாம்புப் பூச	216	
9. 32 தூண்களுக்குச் சிமெந்துப் பூச	153	60
10. 2 கக்கூசு (தகரர்)	150	
11. 2 அறைகள் 18×18	2500	
12. போட்டிகளோ	500	
13. பள்ளிக்கூட நிலம் மண்போட்டு நிரவ	400	
14 வேலியும் கேற்றும்	90	
15. கிணறு 1	200	
16. காரதலைக் கட்டிடம்	2000	
இன்னும் நடக்கவேண்டிய வேலைகளுக்குத் தேவையான ரூபாமொத்தம்	9791	60

இவ்வித்தியாசாலை சைவ ஆங்கில தமிழ் மத்திய கலவன் பாடசாலையாக 1927-ம்ஆண்டு மார்ச்மீ தொடக்கம் இவ்வைச் சைவவித்தியாவிருத்திச்சங்க ஆதரவின்கீழ் நடைபெறுகின்றது. தற்போது ஆங்கிலம் 5-ம் வகுப்பு வரையிலும், தமிழ்ப்பள்ளிக்கூடமிலை வகுப்பு வரையிலும் படிப்பிக்கப்படுகின்றது. இன்னும் கோப்பாய் அரசினர் ஆசிரியர் சாலைப் பிரவேசபரீட்சைக்கும் பாலபண்டித பரீட்சைக்குர் தோற்றுவார்கள் தேற்றுதல் உயர்தர வகுப்புக்கள் அமைத்து நடத்தப்படும்.

இதுகாறும் இப்புண்ணிய கைங்கரியத்துக்குப் பொருளுபகரித்த பொதுநன்மைவிரும்பிய புண்ணியசீலர்கள் யாவர்க்கும் எல்லாம் வல்ல இறைவன் நன்னருள் பாலிப்பாராக.

இன்னும்இப் புண்ணிய கைங்கரியம் நிறைவேறும் வண்ணம் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்து இதை நிறைவேற்றி வைக்குமபடி உங்கள் ஒவ்வொருவரையுந் தாண்மையுடன் கேட்கின்றோம்.

சி. வைத்திலிங்கம்,
கௌரவதனுகிகாரி,
வித்தியாசாலைக் கட்டிட சிருவாகசபை.

வை. விஜயரத்தினம் அதிகாரசனர்.
மு சதாசிவம் } கௌரவ காரியதரிசிகள்.
ச. நாகலிங்கம்

20-8 28, வேலணை.

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vaddukoddai.